டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 28.01.2026 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 33 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 181 - Madurai | Online Edition

# காஷ்மீர் பள்ளத்தாக்கில் அனைத்து வானிலைகளை எதிர்கொள்ளும் ரயில்வே இணைப்பு, நம்பகமான உணவு தானிய விநியோகத்தை உறுதி செய்கிறது

புது தில்லி, ஜன.27

காஷ்மீர் பள்ளத்தாக்குக்கான சரக்குப் போக்குவரத்தில் ஒரு முக்கிய மைல்கல்லாக, இந்தப் பகுதிக்கு அனைத்து வானிலைகளை எதிர்கொள்ளும் ரயில் இணைப்பின் வலிமையைக் காட்டும் வகையில், முதல் முழுவதும் உணவு தானியங்களை (அரிசி) நிரப்பிய ரயில் 22.01.26 அன்று அனந்த்நாக்கை அடைந்தது. இந்திய உணவுக் கழகத்துடன் நீடித்த ஒருங்கிணைப்பைத் தொடர்ந்து, சரக்குப் போக்குவரத்துச் செலவுகளைக் குறைப்பதற்காக, 2,768 மெட்ரிக் டன் அரிசியை ஏற்றிச் செல்லும் 42 வேகன்களைக் கொண்ட முழுமையான ரேக், ரயில் மூலம் அனந்த்நாக் உணவு கிடங்கிற்குக் கொண்டு செல்லப்பட்டு, சாதனை படைக்கப்பட்டது. முன்னதாக, 1,384 மெட்ரிக் டன் உணவு தானியங்களை ஏற்றிச் செல்லும் 21 வேகன்களைக் கொண்ட மினி ரேக்குகள் மட்டுமே ரயில் மூலம் கொண்டு செல்லப்பட்டன. இருப்பினும், இந்த முறை, முழு ரேக்கும் ஜனவரி 21 அன்று பஞ்சாபில் உள்ள சங்ரூர் ரயில் முனையத்திலிருந்து வெற்றிகரமாக ஏற்றப்பட்டு 24 மணி நேரத்திற்குள் அனந்த்நாக்கிற்கு கொண்டு செல்லப்பட்டது. மோசமான வானிலை நிலவிய போதிலும், ரேக் வெற்றிகரமாக கையாளப்பட்டது. இது பள்ளத்தாக்கில் உணவு தானிய விநியோகச் சங்கிலி மற்றும் விநியோக வலையமைப்பிற்கு குறிப்பிடத்தக்க ஊக்கத்தை அளித்தது. காஷ்மீர் பள்ளத்தாக்கில் உணவு தானிய விநியோக வலையமைப்பை வலுப்படுத்துவதில் இந்த மைல்கல் ஒரு முக்கியமான தொடக்கத்தைக் குறிக்கிறது. மினி ரேக்குகள் மற்றும் சாலை அடிப்படையிலான போக்குவரத்திலிருந்து முழு கொள்ளளவு கொண்ட ரயில் வேகன்களுக்கு மாறுவது ஒட்டுமொத்த தளவாடங்கள் மற்றும் சரக்கு செலவுகளைக் கணிசமாகக் குறைக்கும். அதே வேளையில் அத்தியாவசியப் பொருட்களின் வேகமான மற்றும் நம்பகமான இயக்கத்தை உறுதி செய்யும்.

# இயற்கை விவசாயியுடன் கலந்துரையாடிய வேளாண் கல்லூரி மாணவர்கள்

திருவண்ணாமலை, ஜன 27

திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், கீழ்நெல்லி கிராமத்தில் 23.01.26 அன்று இயற்கை விவசாயம் மேற்கொண்டு வரும் தணிகைமலை அவர்களிடம், வாழவச்சனூர், வேளாண்மை கல்லூரி மாணவர்கள் கிராமப்புற அனுபவ பயிற்சி திட்டத்தின் கீழ் நேரடியாக சந்தித்து கலந்துரையாடல் மேற்கொண்டனர்.




தணிகைமலை, ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லிகளை பயன்படுத்தாமல், முழுமையாக இயற்கை முறைகளைக் கடைபிடித்து விவசாயம் செய்து வருகிறார். மண்வளத்தை பாதுகாக்கும் விதமாக பஞ்சகாவ்யா, ஜீவாமிர்தம், மீன் கரைசல் போன்ற இயற்கை உள்ளீடுகளை பயன்படுத்தி தரமான மற்றும் சத்தான விளைச்சலை பெறுகிறார்.

அவர் தனது விளை நிலத்தில் வாழை, நெல் ஆகியவற்றை தனிப்பயிராகவும், கத்தரி மற்றும் நிலக்கடலையை ஊடுபயிராகவும் பயிரிட்டு இருந்தார். இக்கலந்துரையாடலின் வாயிலாக இயற்கை விவசாயத்தின் நடைமுறை அனுபவங்கள் பற்றி மாணவர்கள் அறிந்து கொண்டனர்.

இவரது செயல்பாடுகள் மற்ற விவசாயிகளுக்கு பெரும் ஊக்கம் அளிப்பதாக உள்ளன.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# சாமந்தி செடியில் முனை கிள்ளுதல் மற்றும் மலர்மொட்டு அகற்றல் குறித்து வேளாண் கல்லூரி மாணவிகள் செயல் விளக்கம்

கிருஷ்ணகிரி, ஜன.27

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் அதியமான் வேளாண்மை மற்றும் ஆராய்ச்சி கல்லூரியின் சார்பாக வேளாண்மை உதவி இயக்குநர் பன்னீர் செல்வம் தலைமையில் 12 பேர் (சிந்துஜா ஸ்ரீ, சௌந்தரி ச, ஸ்ரீநதி ஏ, ஸ்டெப்ரினா சு, சுபஸ்ரீ மு சி, சுவேதா ந, சுவாதி பிரியா மு, சுவேதா கோ தா, தமிழரசி த, திரிசா கு, வைஷ்ணவி கி,வான்மதி த) கொண்ட இளமறிவியல் 4ம் ஆண்டு மாணவிகள் குழு ஊரக வேளாண்மை மற்றும் பயிற்சி திட்டத்தின் கீழ் நியமிக்கப் பட்டுள்ளனர்.



சூளகிரி வட்டாரத்தில் உள்ள கிராமங்களுக்குச் சென்று அங்கு உள்ள விவசாயிகளிடம் உரையாடவும், அவர்கள் பின்பற்றும் பாரம்பரிய மற்றும் தொழில்நுட்ப விவசாய செயல்முறை மற்றும் பயிர் திட்டங்களை மாணவிகளுக்கு எடுத்துரைத்தார். மேலும், மாணவிகள் கல்லூரியில் கற்றறிந்த நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் நவீன விவசாய இயந்திரங் களைப் பற்றி எடுத்துரைத்து செயல்முறை விளக்கங்களையும் விவசாயிகளுக்கு செய்து காண்பிக்க உள்ளனர். அதன் ஒரு பகுதியாக, சூளகிரி வட்டத்தில் உள்ள நல்லகானகொத்தபள்ளி கிரா மத்தில், முனை கிள்ளுதல் மற்றும் மலர் மொட்டு அகற்றுதல், முனை கிள்ளுதல் என்பது சாமந்தி செடியின் மேல்முனையை விரலால் அல்லது கத்தரிக் கோலால் கிள்ளி அகற்றும் செயல் ஆகும்.

மலர்மொட்டு அகற்றுதல் என்பது மலர்க் கிளைகளில் உருவாகும் தேவையில்லாத சிறிய மலர்மொட்டுகளை அகற்றி, முக்கிய மொட்டிற்கு மட்டும் வளர்ச்சியை அனுமதிக்கும் செயல் ஆகும் என்று மாணவிகள் செயல் விளக்கம் மூலம் எடுத்துரைத்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# எலச்சிப்பாளையத்தில் வேளாண் கல்லூரி மாணவர்களின் களப்பணி துவக்கம்



நாமக்கல், ஜன.27

நாமக்கல் மாவட்டம், பிஜிபி வேளாண் கல்லூரியில் பயிலும் இறுதியாண்டு மாணவர்கள் ரகுநாதன், ராஜராஜன், ராஜாராம், ராஜேஸ்வரன், சதீஷ், சஞ்சய், சசிகுமார், சதிஷ் ஆகியோர் தங்கள் இறுதியாண்டு பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக கிராமப்புற அனுபவ வேளாண் பயிற்சி (RAWE) மேற் கொள்வதற்காக எலச்சிப்பாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்கு வருகை புரிந்து உள்ளனர். இதனை முன்னிட்டு, எலச்சிப் பாளையத்தில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையத்தில் களப்பணி துவக்க விழா சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வின் முக்கிய அம்சமாக, மாணவர்கள் நவீன வேளாண் தொழில்நுட்பங்களை விவசாயிகளுடன் பகிர்ந்து கொண்டனர். குறிப்பாக, பயிர் நோய்கள், பூச்சி தாக்குதல், ஊட்டச்சத்து குறைபாடுகளை அடையாளம் காண உதவும் ‘Plan-tix’ என்ற கைபேசி செயலி குறித்து விரிவாக விளக்கம் அளிக்கப் பட்டது. இச்செயலி மூலம் பயிர் மேலாண்மை தொடர்பான தீர்வுகளை எளிதாக பெற முடியும் என்பதை மாணவர்கள் எடுத்து உரைத்தனர். இதனை விவசாயிகள் ஆர்வத்துடன் கவனித்து, தங்களது சந்தேகங்களை மாணவர்களிடம் கேட்டறிந்தனர்.

நிகழ்ச்சியின் இறுதியாக, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பசுமை வளர்ச்சியை வலியுறுத்தும் வகையில் மரக்கன்று நடும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த களப்பணி காலத்தில், மாண வர்கள் விவசாயிகளுடன் நேரடியாக இணைந்து பணியாற்றி, அவர்களது பிரச்சனைகளை அறிந்து தீர்வுகளை முன் வைப்பதுடன், நவீன வேளாண் அறிவியல் நுட்பங்களை கிராமப் புறங்களுக்கு கொண்டு செல்லும் பணியில் ஈடுபட உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.





**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.

இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

நன்றி

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

# ஆடு வளர்ப்பில் அதிக ஆர்வம் காட்டி வரும் பட்டதாரி விவசாயிடம் கலந்துரையாடிய வேளாண் கல்லூரி மாணவர்கள்




பெரம்பலூர், ஜன.27

பெரம்பலூர் மாவட்டம், கீழக்கனவாய் கிராமத்தில் பட்டதாரி விவசாயி சுரேஷ், ஆடு வளர்த்து வருகிறார். சுரேஷ் தேவராஜ், ஆட்டுப்பண்ணை என்னும் பெயரில் இவர் ஆடு, மாடு மற்றும் கோழி வளர்த்து வருகிறார். இவரை, இமயம் வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப கல்லூரியின் நான்காம் ஆண்டு மாணவர்களான கார்த்திக், கதிர், கவி கிசோர், கவி அரசு, கவியரசு, மணிகண்டன், மாதவன், மதிகணேஷ், மோகன்ராஜ், முத்துப்பாண்டி, நாகராஜ் ஆகியோர் கிராமத்தில் தங்கி பயிற்சி பெறும் திட்டத்தின் கீழ் வேளாண் அலுவலர் சௌமியா ஆலோசனை படி சென்று பார்த்தனர்.

இவர் சுமார் ஐந்து ஆண்டுகளாக ஆடு வளர்ப்பு செய்து வருகிறார். அதுமட்டுமல்லாமல் இவர் சுமார் ஐம்பது தீவன பயிருக்கு மேல் உற்பத்தி செய்து வருகிறார். அதில் வெளிமாநில ரகமான சூப்பர் நேப்பியர், குனியா கிராஸ், கம்பு நேப்பியர் ஹைபிரிட், ஜிஞ்சுவ பில் புள், சுருதி, கரும்பு க்ராஸ், கிளிசிரிடியா போன்ற ஏராளமான பயிர்களை பயிரிட்டு வருகிறார். இந்த தீவன பயிரின் வெட்டுத்துண்டுகளை ஒன்னு ஒரு ரூபாய் என்ற கணக்கில் விற்பனை செய்தும் வருகிறார்.

அதுமட்டுமல்லாமல் இவர் முள்ளில்லா சப்பாத்தி கள்ளி உற்பத்தி செய்து அதை மாகளுக்கு தீவனமாக கொடுத்து வருகிறார். இவர் இதில் ஒரு வருடத்திற்கு பெரும் லாபம் வருவதாக கூறினார். அவரிடம் இருந்து வேளாண் கல்லூரி மாணவர்கள் ஆடு வளர்க்கும் தொழில்நுட்பம் பற்றி கேட்டறிந்தனர்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# மக்காச்சோளத்தில் படைப்புழு ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகள்

மக்காச்சோளம் தமிழகத்தில் முக்கியமான உணவு மற்றும் மாட்டுத்தீவனப் பயிராகும். சமீப ஆண்டுகளில் மக்காச்சோளப் பயிரில் படைப்புழு (Fall Armyworm - Spodoptera frugiperda) தாக்கம் அதிகரித்து வருவது விவசாயிகளிடையே கவலையை ஏற்படுத்தி உள்ளது. இந்த பூச்சி சரியான நேரத்தில் கட்டுப்படுத்தப்படாவிட்டால் அதிக விளைச்சல் இழப்பை ஏற்படுத்தும்.

**படைப்புழு என்றால் என்ன?**

படைப்புழு என்பது மக்காச்சோளம் உள்ளிட்ட பல தானியப் பயிர்களைத் தாக்கும் ஒரு முக்கிய பூச்சியாகும். இந்த பூச்சி முதலில் அமெரிக்காவில் கண்டறியப்பட்டு, தற்போது ஆப்ரிக்கா மற்றும் ஆசிய நாடுகளில் வேகமாகப் பரவி வருகிறது. இந்தியாவில் குறிப்பாக மக்காச்சோளத்தில் அதிக சேதத்தை ஏற்படுத்துகிறது.

**படைப்புழு தாக்குவதால் ஏற்படும் சேதம்**

1.இளம் பயிர் நிலையிலேயே இந்த பூச்சி தாக்க ஆரம்பிக்கும்.

2.இலைகளில் சீரற்ற துளைகள் உருவாகும் மைய இலைப் பகுதியில் கருமையான கழிவு (கூஷ்ஷெழிவிவி) காணப்படும்.

3.இலைகள் கிழிந்தது போல தோற்றமளிக்கும்.

4.அதிக தாக்கம் ஏற்பட்டால் செடி வளர்ச்சி தடைபட்டு கதிர் உருவாகாது.

5.விளைச்சல் மட்டுமல்லாமல் தரமும் பாதிக்கப்படுகிறது.

**படைப்புழுவின் வாழ்க்கைச் சுழற்சி**

படைப்புழு முட்டை, புழு, கூடு மற்றும் பூச்சி என நான்கு நிலைகளைக் கொண்டது. பெண் பூச்சி இலைகளின் அடிப்புறத்தில் கூட்டமாக முட்டைகளை இடும். அதிலிருந்து வெளிவரும் புழுக்கள் அதிக சேதத்தை ஏற்படுத்துகின்றன. முழு வாழ்க்கைச் சுழற்சி சுமார் 30-40 நாட்களில் முடிவடைகிறது.

**படைப்புழு மேலாண்மை முறைகள்**

**1. கண்காணிப்பு முறைகள்**

விதைத்த 7-10 நாட்களிலிருந்து பயிரை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். 10 செடிகளில் 2 செடிகளில் தாக்கம் இருந்தால் கட்டுப்

பாடு அவசியம். ஏக்கருக்கு 4-5 பெரோமோன் வலைகள் அமைத்து பூச்சி நடமாட்டத்தை கண்காணிக்கலாம்.

**2. இயந்திர மற்றும் பாரம்பரிய முறைகள்**

தாக்கம் அதிகமான இலைகளை வெட்டி அழித்தல், மைய இலை பகுதியில் மண் + சாம்பல் (1:1) கலவையை இடுதல், சிறிய நிலங்களில் கை முறையாக புழுக்களை சேகரித்து அழித்தல்.

**3. உயிரியல் கட்டுப்பாட்டு முறைகள்**

1. Trichogramma chilonis/T.pretiosum ஏக்கருக்கு 1,00,000 முட்டை பராசிட் 7 நாட்களுக்கு ஒரு முறை 3 முறை வெளியிட வேண்டும்.



2. Beauveria bassiana 5 கிராம் / லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்கலாம்.

3.வேப்ப விதை சாறு (NSKE 5%) ஆரம்ப நிலை தாக்கத்தில் சிறந்த பலன் தரும்.

மேலும் விவரங்களுக்கு ரா.தீபிகா, இறுதியாண்டு வேளாண் மாணவி மற்றும் முனைவர் B.குணா, இணைப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், குழு ஒருங்கிணைப்பாளர், S.சந்தியா, A.L.நிவேதா, உதவிப் பேராசிரியர்கள் மற்றும் குழு ஒருங்கிணைப் பாளர்கள், நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, எம்.ஆர்.பாளையம், திருச்சி. மின்னஞ்சல் : baluguna 8789@gmail.com, தொலைபேசி எண் : 99446 41459 ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.

# மீன் மாவு வலை அமைப்பது குறித்த செய்முறை விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்



நாமக்கல், ஜன.27

நாமக்கல் பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரியில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவிகள் தங்களது இறுதி ஆண்டு பாடத் திட்டமான கிராமத்தில் தங்கி வேளாண் பயிற்சி பெறும் திட்டத்தின் கீழ் பிள்ளூர் கிராமத்தில் உள்ள சோளம் பயிரிடப்பட்ட வயலில், சோளம் தண்டு ஈ தாக்குதலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் மீன் மாவு வலை (Fish Meal Trap) அமைப்பது குறித்த செய் முறையை விளக்கினார்கள்.

இந்த செயல்முறையின் மூலம் விவசாயிகளுக்கு, ரசாயன பூச்சிக் கொல்லிகளை குறைத்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் தண்டு ஈயைக் கட்டுப்படுத்தும். மீன் மாவு வலை அமைப்பதன் மூலம் தண்டு ஈக்களை ஈர்த்து அழிக்க முடிவதால், பயிரின் ஆரம்ப வளர்ச்சி நிலையிலேயே பூச்சி தாக்குதலை குறைக்க முடியும் என எடுத்துரைத்தனர்.

இந்த முறையால் குறைந்த செலவில் நல்ல விளைச்சல் பெற முடியும் என்றும், விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப் படுத்தினர்.


Rithvik Pipe
25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன்
கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்
பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்
25 ஆண்டுகள் உத்தரவாதம்
நம்பிக்கைக்கு அடையாளம்
100% LEAD-FREE பைப்புகள்
ஆரோக்கியமான தண்ணீர்,
ஆரோக்கியமான வாழ்க்கை
சான்று பெற்ற பைப்புகள்
தரத்திற்க்கு ஒரே அடையாளம்
பைப்புகள் மட்டும் தயாரிக்கும்
நிறுவனம்—தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
67 GRADE மூலப்பொருட்கள்
அதிக வலிமை, நீண்ட ஆயுள்
TEST CERTIFICATE – QR CODE மூலமாக
ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
FREE ON-SITE TESTING
விற்பனைக்கு பின் தரம் உங்கள்
கண்முன்னே
சரியான எடை, தடிமன்
ஏமாற்றமில்லா தயாரிப்பு
PRODUCT RANGES
ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes)
ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80)
ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy)
ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG)
ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm
PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK
RITHVIK PIPES PROUDLY TRUSTED BY
LMW
isha
Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com
POWERGRID
BHEL
Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com
For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# நெல் கொள்முதல் நிலையங்கள் - ஓர் பார்வை



தமிழகத்தில் காரீப், ராபி பருவத்தில் சாகுபடி செய்யப்பட்ட நெல்லை அரசே நேரடியாக கொள்முதல் செய்வதற்காக, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழகம் (TNCSC) மூலமாக விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்முதல் செய்ய ஏற்படுத்தப்பட்ட மையங்கள் (DPC).

**இதனுடைய சிறப்பு அம்சம்?**

DIRECT PROCUREMENT CENTRE என்ற நெல் கொள்முதல் நிலையங்களில், விவசாயிகளுக்கு இடைத்தரகர்கள் இன்றி, நியாயமான விலை அதுவும் அரசு நிர்ணயித்த விலையில் கொள்முதல் செய்யப்படும். 33 செண்ட் நிலப்பரப்பளவில் இந்த அமைப்பு அமைக்க படுவதுடன் 100 மெட்ரிக் நெல் சேமிப்புகூடம் கொண்ட அமைப்பாகும். நவீன தொழில் நுட்பங்களுடன் ஈரப்பதத்தை உலர்த்தும் களம் (DRYING YARD) WINNOWING MACHINE, மற்றும் ஈரப்பதத்தை அளவீடும் கருவி (MOISTURE METER) மேடைத் தாரசு உள்ளிட்ட கருவிகளுடன் செயல்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**ஒரு குவிண்டால் நெல் விலை எவ்வளவு தெரியுமா?**

சன்ன ரக நெல்லுக்கு ஒரு குவிண்டால் 2545 என்றும் மோட்டா ரகத்திற்கும் 2500 என்றும் விலை நிர்ணயிக்கப் பட்டுள்ளது. அதாவது நெல் குறைந்த பட்ச ஈரப்பதமாக 17% இருக்க வேண்டும். தரமான நெல்லுக்கு எவ்வித பணப்பிடித்தம் இன்றி பட்டுவாடா செய்யப்படும்.

**இங்கு எத்தனை கிலோ நெல் கொள்முதல் செய்யப்படுகிறது?**

ஒரு நாளைக்கு 1000 மூட்டைகள் கொள்முதல் செய்யப்படும். ஒரு மூட்டையின் கொள்ளளவு 40.580 கிலோ (சாக்கு உட்பட) கொள்முதல் செய்யப்படும்.

**விவசாயிகள் செய்ய வேண்டியது என்ன என்ன?**

அறுவடை செய்யப்பட்ட நெல்லை நன்றாக உலர்த்தி பொக்கு பதர்களை நீக்கி சுத்தமாக தரமான நெல்லாக இருக்க வேண்டும். E.DPC என்ற மொபைல் ஆப் மூலமாக முன்பதிவு செய்ய வேண்டும். அதற்கு தேவையான சாகுபடி செய்யப்பட்ட நிலத்தின் சிட்டா அடங்கல் வங்கி கணக்கு புத்தகத்தின் முன் பக்க நகல் ஆகியவற்றுடன் பதிவு செய்ய வேண்டும். கொள்முதல் நிலையத்திலிருந்து குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் விற்பனை செய்ய குருஞ் செய்தி (SMS) மூலமாக அழைப்பு விவசாயிகளுக்கு வரும். அந்த நாளில் கொண்டு செல்ல வேண்டும். முன்னுரிமைபடி அழைப்பு வரும்.

**கொள்முதல் நிலையம் செயல்படும் நேரங்கள் தெரியுமா?**


காலை 9.30 மணிமுதல் 1.30 மணி வரை மற்றும் மதியம் 2.30 மணிமுதல் மாலை 6.30 மணி வரை.

வங்கி பணவர்த்தனை மூலமாக (ECS) விவசாயிகள் விற்பனை செய்த 3 நாட்களுக்குள் அவரவர் வங்கி கணக்கில் வரவு செய்யப்படும்.

விவசாயிகள் விற்பனை செய்யும் நெல்லுக்கு கொள்முதல் நிலையங்களில் யாரும் லஞ்சம் பெறுவது, வழங்குவது சட்ட படி குற்றமாகும். மேலும் ஏதேனும் புகார் தெரிவிக்க சம்மந்தப்பட்ட மைய மண்டல மேலாளரை அணுகிட வேண்டும். குறிப்பிட்ட இடத்தில் நெல் அதிகபட்சமாக இருக்கும் போது (SPOT PROCUREMENT) செய்யப்படும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



# டிஜிட்டல் பயிர் கணக்கெடுப்பு பணியில் ஈடுபட்ட வேளாண்மை கல்லூரி மாணவர்கள் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ஆய்வு



நாமக்கல், ஜன.27

நாமக்கல் மாவட்டம், மலசமுத்திரம் வட்டாரத்தில் நடைபெற்று வரும் டிஜிட்டல் பயிர் கணக்கெடுப்பு (Digital Crop Survey) பணிகளில் ஈடுபட்டிருந்த பிஜிபி (PGP) வேளாண்மை கல்லூரி மாணவர்களின் செயல்பாடுகளை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் டாக்டர் பி.கவிதா நேரில் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, மாணவர்கள் விவசாய நிலங்களில் பயிர்களின் வகை, பரப்பளவு, வளர்ச்சி நிலை, விதைப்பு காலம் உள்ளிட்ட விவரங்களை மொபைல் செயலிகள் மற்றும் டிஜிட்டல் கருவிகள் மூலம் பதிவு செய்து வருவது குறித்து விளக்கமளித்தனர்.

டிஜிட்டல் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி துல்லியமான தரவுகளை சேகரிப்பது அரசு திட்டங்களை திறம்பட செயல்படுத்த உதவும் என டாக்டர் பி.கவிதா தெரிவித்தார். மேலும், மாணவர்கள் மேற்கொள்ளும் இந்த டிஜிட்டல் பயிர் கணக்கெடுப்பு பணிகள் எதிர்கால வேளாண்மைக்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும் என்றும், விவசாயிகளுக்கு நேர்மையான பலன்களை கொண்டு சேர்க்கும் வகையில் செயல்பட வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

இந்த நிகழ்வில் வேளாண்மை துறை அலுவலர்கள், பிஜிபி வேளாண்மை மாணவர்கள் கலந்து கொண்டனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# விதையின் ஈரப்பதம் அறிந்து விதைகளை சேமிக்க மூத்த வேளாண்மை அலுவலர்

விழுப்புரம், ஜன.27

விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட விவசாயிகள் கவனத்தில் கொள்ள வேண்டியவை, விதைகளின் தரம், பயிர் விளைச்சல் மற்றும் பயிர் ஆரோக்கியத்தினை தீர்மானிக்கிறது. பயிர் உற்பத்தியில் ஏற்படும் அபாயங்களை குறைக்கிறது.



பயிர் நடவு செய்வதற்கு முன் விதைகளின் தரம் எவ்வாறு உள்ளது என்பதை அறிந்து கொள்ளவும், தரமற்ற விதைகளை விதைப்பதால் ஏற்படும் நேரம் மற்றும் பண விரயங்களை தடுப்பதில் விதைப்பரிசோதனை முக்கிய பங்காற்றுகிறது. விதைகளின் முளைப்புத்திறனை அறிந்து கொள்வதன் மூலம் தேவையான மற்றும் சரியான விதை அளவை நிர்ணயம் செய்து, கூடுதல் செலவை குறைக்க உதவுகிறது. நோய் மற்றும் பூச்சி தாக்குதலற்ற விதைகளை கண்டறிந்து அதன் மூலம் பின்னாளில் ஏற்படும் நஷ்டங்களையும் கால விரயத்தினையும் தவிர்க்க உதவுகிறது.

நல்ல தரமான விதைகளை அடுத்த பருவத்திற்கு நாம் சேமித்து பயன்படுத்த திட்டமிட்டால் சேமிப்பதற்கு முன், விதையின் ஈரப்பதத்தினை கண்டறிந்து பூச்சிநோய் தாக்காத அளவிற்கும், நீண்டநாள் விதை உயிருடன் இருக்கவும் உகந்த ஈரப்பதத்தில் சேமிக்கவும் விதைப்பரிசோதனை முக்கிய பங்காற்றுகிறது. எனவே ஈரப்பத அளவு : நெல் 13%, உளுந்து 9%, சிறுதானியங்கள், மக்காச்சோளம் 12%, எண்ணெய் வித்துக்கள் 9%, பருத்தி 10% இருக்க வேண்டும்.

விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட விவசாயிகள் தங்களிடம் உள்ள விதைகளை பரிசோதனை செய்ய விதை மாதிரி ஒன்றுக்கு ரூ.80/- ஆய்வுக் கட்டணமாக செலுத்தி விதையின் தரம் அறிந்து விதைக்கவும், அறுவடை செய்த விதையினை அடுத்த விதைப்புக்கு சேமிக்கவும், விதையின் ஈரப்பதம் அறிந்து கொண்டு, விதைகள் பூச்சி நோய் தாக்குதலுக்கு உள்ளாகாமல் சேமிக்க வேண்டும் என மூத்த வேளாண்மை அலுவலர் வேண்டுகோள் விடுத்துள்ளார். மேலும் விவரங்களுக்கு மூத்த வேளாண்மை அலுவலர், விதை பரிசோதனை நிலையம், வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக முதல் தளம் விழுப்புரம் என்ற முகவரியை அணுகலாம் எனவும் தெரிவித்துள்ளார்.



# இப்கோ நானோ விழிப்புணர்வு கருத்தரங்கம்



தஞ்சாவூர், ஜன.27

தஞ்சாவூர் மாவட்டம், பொன்னப்பூர் கிராமத்தில் நானோ உரங்கள் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் இப்கோ கள அதிகாரி நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி, நானோ ஜின்க், நானோ காப்பர், சாகரிகா உள்ளிட்ட நானோ மற்றும் திரவ உரங்களின் பயன்கள், பயன்பாட்டு முறை மற்றும் பல்வேறு பயிர்களில் பெறப்படும் நன்மைகள் குறித்து விரிவாக விளக்கினார். நானோ உரங்கள் பயன்படுத்துவதால் உர செலவு குறைதலும், மண்வளம் பாதுகாப்பதும் முக்கிய நன்மைகளாகும் என்பதை விவசாயி களுக்கு எடுத்துரைத்தார்.

பின்னர், இப்கோவின் சங்கட ஹரன் பீமா யோஜனா திட்டம் குறித்து அறிமுகப்படுத்தி, நானோ உரங்களை வாங்கும் ஒவ்வொரு விவசாயிக்கும் ரூ.2 லட்சம் வரை இலவச விபத்து காப்பீடு கிடைக்கும் என்பதை தெரிவித்தார்.

மேலும், இரசாயன உரங்களின் பயன்பாடு மண் மாசுபாடு மற்றும் மண்வள குறைவை ஏற்படுத்தும் என்பதை வலியுறுத்தினார். இதற்குமாற்றாக நானோ உரங்கள் ஒரு சிறந்த தீர்வாக இருக்கும் என்றும் கூறினார். துல்லியான முறையில் நானோ உரங்களை தெளிப்பதற்கு இப்கோ கிசான் ட்ரோன் சேவையைப் பயன்படுத்தலாம் என்றும், நானோ உரங்களுடன் பூச்சிக்கொல்லி மருந்துகளையும் சேர்த்து தெளிக்கலாம் என்றார்.

நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, ஓய்வு பெற்ற இந்திய இராணுவ அதிகாரியும் விவசாயியுமான ஜெயராமனுக்கு நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் புகைப்பட சட்டகம் வழங்கி பெருமை உடன் கௌரவிக்கப்பட்டார். இராணுவ சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும், விவசாயத்தின் மூலம் நாட்டுக்கு அவர் தொடர்ந்து சேவை செய்து வருவது பாராட்டுக்குரியது.

# கிராம வளங்கள் பற்றிய வேளாண் மாணவர்களின் விழிப்புணர்வு



கடலூர், ஜன.27

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் ஒன்றியம், வீ.ா.புத்தூர் கிராமப் பகுதியில் திருவண்ணாமலை மாவட்டம், வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், வாழவச்சனூர் மாணவிகள் ஊரக வேளாண் பணி அனுபவ திட்டத்தின் கீழ், மாணவிகள் அனைவரும் ஊர் பொதுமக்களுடன் இணைந்து பல விதமான வரைபடங்கள் வரைந்து கிராம வளங்களைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்த நிகழ்ச்சியானது கிராம மக்களின் உதவியுடன் T.V.புத்தூர் கிராமப் பகுதியில் மாரியம்மன் கோவில் அருகில், ஊராட்சி மன்ற அலுவலகம் முன்பு மாணவிகள் அனைவரும் இணைந்து வரைபடம் வரைந்து கிராம வளங்கள் பற்றியும், பிரச்சினைகள் பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இளைஞர்கள், பெண்கள், விவசாயிகள் மற்றும் பள்ளி மாணவர்கள் அனை வரும் இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியானது அனைத்து பொது மக்களுக்கும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் சமூக வரைபடம், கிராம வளங்கள் வரைபடம், பிரச்சினைகள் மர வரைபடம், காலக்கோடு வரைபடம், பருவகால அட்டவணை, தினசரி வேலை வரைபடம் போன்ற பல்வேறு விதமான வரைபடங்கள் மூலம் வேளாண் மாணவிகள் விவசாயப் பெருமக்களுக்கும், பொது மக்களுக்கும் கிராம வளங்களைப் பற்றியும், பூச்சி மற்றும் நோய்த் தாக்குதலின் அறிகுறிகள் பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

# வசந்தம் அக்ரிடெக்

VASANTHAM Agri Tech

தலைமை அலுவலகம்: 129/1ஏ2, வண்டியூர் ரிங் ரோடு, சங்கு நகர், மதுரை, தமிழ்நாடு-625020.

கிளைகள்:-மதுரை,சிவகங்கை,திருநெல்வேலி

## 1 பவர் வீடர் = 40 வேலை ஆட்கள்

## இப்போது அரசு மானியத்தில்



- 40% - பெரிய விவசாயி
- 50% - பெண்கள் / SC/ST
- 60% - சிறுகுறு விவசாயி
- 70% - சிறுகுறு விவசாயி & SC/ST

Sarathi i06

### மானியத்திற்கு விண்ணப்பிக்க தேவையான ஆவணங்கள்

- ஆதார்
- புகைப்படம்
- பட்டா
- அடங்கல்
- சாதிச் சான்றிதழ் (தகுதி இருந்தால்)
- சிறுகுறு விவசாயி சான்றிதழ்



Yield max VT 260

### உடனடி மானியம் உள்ள மாவட்டங்கள்

- மதுரை
- சிவகங்கை
- விருதுநகர்
- ராம்நாடு



Sirachi 8D6

1,22,344 மதிப்புள்ள 9 HP டீசல் பவர் வீடர்,SC மற்றும் சிறு விவசாயிக்கு 36,703 மட்டுமே

இப்போதே விண்ணப்பியுங்கள் +91 75400 66652

# கரும்பில் செவ்வழுகல் நோய்க்கு ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை



தமிழ்நாட்டில் கரும்பு உற்பத்தி, செவ்வழுகல் நோயால் 25 - 30 விழுக்காடு வரை ஒவ்வொரு ஆண்டும் பாதிக்கப்படுகிறது. இந்த நோயின் பாதிப்பினால் வயல்வெளியில் கரும்பின் மகசூல் குறைவதோடு, கரும்பின் சர்க்கரை சதவீதமும் குறைகிறது. இதனால் விவசாயம், தொழிற்சாலை பாதிப்பதோடு இதன் பொருளாதார தாக்கம் நாட்டின் வாழ்வாதாரத்தையே பாதிக்கக் கூடிய தாக உள்ளது. கரும்பில், செவ்வழுகல் நோய் பூஞ்சையினால் ஏற்படும் நோயாகும். குளோமெரெல்லாடு குமனென்ஸிஸ் என்ற பூஞ்சாணம் இதன் நோய்க் காரணியாக விளங்குகின்றது. இவை மண்ணின் மூலமாகவும், காற்றின் மூலமாகவும், நோயற்ற விதை கரணைகள் மூலமாகவும் நோய்களை பரப்புகின்றன. இந்த பூஞ்சாணம், இலைப்பரப்பு பகுதிகளில் விழுந்து, தனியாகவோ அல்லது கூட்டமாகவோ வாஸ் குலார் கற்றைகள் இடையே வரிகளை தோற்றுவித்தபடி இருக்கும். பாதிக்கப்பட்ட இலைகள் மஞ்சளாகி உதிர்கின்றன. பாதிக்கப்பட்ட தண்டுப்பகுதிகள் மெலிந்து காணப் படுவதால், எளிதில் உடைந்து விடுகின்றன. கரும்பிலும், சாறு மிகவும் குறைந்து சர்க்கரை சதவீதம் குறையும் அபாயம் உள்ளது.

இந்த நோய் தாக்கப்பட்ட கரும்பின் மூன்று அல்லது நான்காவது இலைகள் முதலில் ஆரஞ்சு நிறம் கலந்த மஞ்சள் நிறத்துடன் காணப்படும். பின் தோகைகள், கீழிருந்து மேலாக காய ஆரம்பிக்கும். இந்த பூசண வித்துக்கள் இலையின் உள்ளே சென்று, நடு நரம்பில் அடர் சிவப்பு நிற புள்ளிகளை உருவாக்கும். பின்பு, இந்த புள்ளிகள் இலைகளிலும் தோன்ற ஆரம்பிக்கும். நோய் தாக்கப்பட்ட 16 – 21 நாட்களுக்குப் பிறகு அறிகுறிகள் தெரிய ஆரம்பிக்கும். கரும்பை நீளவாக்கில் பிளந்து பார்க்கும் பொழுது, உட்பகுதியில் சிவப்பு நிறக் கோடுகளை காண முடியும்.



இவற்றின் குறுக்காக ,வெண்மைநிற பூஞ்சாண பகுதிகளையும் காண முடியும். மேலும், கரும்பின் மேல் பழுப்பு நிற திட்டுகள் காணப்படும். உட்பகுதியில் உள்ள திசுக்கள் அழுகி திரவம் வெளிப்படும். இதிலிருந்து ஒரு வித துர்நாற்றம் வீசுவதை வைத்து இந்த நோயை உறுதி செய்து கொள்ளலாம்.

**ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை**

● இந்த நோயினை கட்டுப்படுத்த நோயற்ற விதைக்கரணைகளை நடவு செய்தல் முக்கியம்.

● நோயுற்ற வயல் வழியாக நீர் பாய்ச்சுவதை தடுக்க வேண்டும்.

● நோய் எதிர்ப்பு சக்தி உடைய கோ 86249, கோ 85019, கோ.சி. 95071, கோ.கு. 93076, கோ.க. 98061, கோ.க. 99061 மற்றும் கோ.க. 22 ரகங்களை பயிரிட வேண்டும்.

● விதைக்கரணைகளை டிரைக்கோடெர்மாவிரிடி (5 கிராம்/1 கிலோ) அல்லது பேசில்லஸ்சப்டிலிஸ் (10 கிராம்/1 கிலோ) போன்ற உயிர் பூஞ்சாணக்கொல்லி அல்லது பாக்டீரியாக் கொல்லியுடன் விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

● 50 டிகிரி செல்சியஸ் சுடுநீரில் 30 நிமிடம் விதைக்கரணைகளை இட்டு பின்பு நட வேண்டும்.

● நல்ல வடிகால் வசதி மற்றும் வயல்வெளி வயலை சுத்தமாக பராமரித்தல் வேண்டும்.

● களைச்செடிகளை அவ்வப்போது அகற்றிட வேண்டும்.

● கரும்பில் தோகை உரிப்பது மிகவும் முக்கியமாகும்.

● மண்ணில், ட்ரைகோடர்மாவிரிடி அல்லது பேசில்லஸ் சப்டிலிஸ் கலவையை ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ என்ற அளவில் 25 கிலோ நன்கு மடக்கிய தொழுஉரத்துடன் கலந்து மண்ணில் இடவேண்டும்.

● இயற்கை திரவங்களான பஞ்சகாவியா, ஜீவாமிர்தம் இவற்றை மண்ணில் அளிப்பது நல்ல பாக்டீரியாக்கள் மற்றும் மண்ணில் உருவாகும் சூழலை ஏற்படுத்தும். இது, பயிர் வளர்ச்சிக்கு ஊக்கியாக அமைவதுடன் பயிர்களுக்கு,எதிர்ப்பு சக்தியையும் அளிக்கும்.

● அமிலத்தன்மை கொண்ட மண்ணில், இந்த நோயின் தீவிரம் அதிகமாக இருக்கும். எனவே மண்பரிசோதனை செய்த பிறகு, அமிலத்தன்மை கொண்டதாக இருந்தால் ஒரு ஏக்கருக்கு 200 இருந்து 400 கிலோ வரை கிளிஞ்சல் சுண்ணாம்பு அல்லது கால்சியம் கார்பனேட், நடவு செய்வதற்கு முன்பு மண்ணில் அளிக்கலாம் அல்லது கரும்பு பயிர் முதிர்ந்த பருவத்தில் ஏழு

மாதத்திற்கு பிறகு இந்த கிளிஞ்சல் சுண்ணாம்பை நீர் வழியாக மண்ணிற்கு அளிக்கலாம். இதனால் மண்ணின் அமிலத்தன்மை மாறும் பொழுது இந்த பூஞ்சாண நோய்கள் இயற்கையிலேயே கட்டுப்பட ஆரம்பிக்கும்.

● வேதியியல் முறையில், புரொப்பிக்கோனசோல் (0.1%) தெளித்து நோயை கட்டுப்படுத்தலாம்.

தகவல் : முனைவர் செ.சுதாஷா, (தாவர நோயியல் துறை), முனைவர் சி.பானுமதி, முனைவர் ப.யோகமீனாட்சி, (பயிர் இனப் பெருக்கம் மற்றும்மரபியல்), முனைவர் வி.அ. விஜயசாந்தி (பூச்சி யியல் துறை), முனைவர் சு.ம.சுரேஷ்குமார், முனைவர் ஆ.ப. சீனிவாசப்பெருமாள், முனைவர் க.சிவகாமி (உழவியல்துறை), முனைவர் செ.தமிழ்செல்வி (பயிர் வினையியல் துறை), முனைவர் கோ.குமரேசன் (வேளாண் நுண்ணுயிரியியல் துறை), முனைவர் த.லா.ப்ரீத்தி, முனைவர் அ.புனிதா (தோட்டக்கலைத் துறை) மற்றும் முனைவர் இரா.அகிலா, (வேளாண் விரிவாக்கத்துறை), வேளாண்மை அறிவியல் நிலையம், திரூர், திருவள்ளூர் மாவட்டம் - 602 025.

# வாழைப்பழத்தின் மதிப்புக்கூட்டுப் பொருட்கள் பற்றிய விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



திருச்சி, ஜன.27

திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரம், தனலெட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக மாணவர்கள் கிராமப்புற விவசாயி பணி அனுபவத் திட்டத்தினை (RAWE) ஸ்ரீரங்கம் வட்டம் அந்தநல்லூர் பகுதியில் தங்கி மேற்கொண்டுள்ளனர். இதன் ஒரு அங்கமாக திருச்சிராப்பள்ளி மாவட்டம், அந்தநல்லூர் கிராமத்தில் உள்ள விவசாயிகளுக்கு வாழைப்பழத்தின் மதிப்புக் கூட்டுப் பொருட்கள் (ரொட்டி, சிப்ஸ், மாவு, ஊறுகாய், குளிர் பானங்கள் மற்றும் மிட்டாய்) பற்றிய விளக்கம், அதன் நன்மைகளை தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மை கல்லூரி மாணவர்கள் விளக்கம் அளித்தனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# திராட்சையில் போர்டோ கலவை செய்முறை விளக்கம்



தேனி, ஜன.27

தேனி மாவட்டம், கம்பம் வட்டாரம், சி.புதுப்பட்டி கிராமத்தில் விவசாயிகளின் திராட்சை வயலில் மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவிகள் 1% போர்டோ கலவை தயாரிப்பு மற்றும் பயன்பாடு குறித்த செய்முறை விளக்கக் காட்சி நடத்தப்பட்டது.

**செயல்முறை விளக்கம்**

1. ஒரு மண்ணிறை / பிளாஸ்டிக் வாளியில் 100 கிராம் நீலத் தாமிர சல்பேட்டை 5லிட்டர் தண்ணீரில் கரைக்க வேண்டும்.

2. மற்றொரு மண்ணிறை / பிளாஸ்டிக் வாளியில் 100 கிராம் சுண்ணாம்பை சிறிது சிறிதாக சேர்த்து 5லிட்டர் தண்ணீரில் கரைத்து சுண்ணாம்பு பால் தயாரிக்க வேண்டும்.

3. சுண்ணாம்பு கரைசலில் நீலத் தாமிர கரைசலை மெதுவாக சேர்க்க வேண்டும்.

4. தொடர்ந்து நன்றாக கலக்கி ஒரே நிறம் வரும் வரை கலக்க வேண்டும்.

5. தயார் செய்யப்பட்ட கலவையை உடனே பயன்படுத்த வேண்டும்.

**பயன்பாடு**

● திராட்சையில் இலைக்கறை, பூஞ்சை நோய்கள் கட்டுப்பாட்டிற்கு பயன்படுத்தலாம்.

● காலை அல்லது மாலை நேரத்தில் தெளிக்க வேண்டும்.

● மழைக்காலத்திற்கு முன் மற்றும் நோய் அறிகுறிகள் தோன்றும் போது தெளிப்பு பயனுள்ளதாக இருக்கும்.

# நீர் பயன்பாட்டுத் திறன் முக்கியத்துவத்தை பற்றி விளக்கம் அளித்த வேளாண் கல்லூரி மாணவி

நீர் பாசன திறன் என்பது பயிர்களுக்கு வழங்கப்படும் நீர் எவ்வளவு பயனுள்ளதாக பயன்படுத்தப்படுகிறது என்பதை குறிக்கிறது.

**பல்வேறு பாசன முறைகளின் தோராயமான நீர் பயன்பாட்டு செயல் திறன்**

**1. சொட்டு நீர் பாசனம்**

95-100% நீர் பயன்பாட்டுத் திறன் கொண்டது. இந்த முறையில், நீர் நேரடியாக பயிரின் வேர் பகுதிக்கு சொட்டு சொட்டாக வழங்கப் படுகிறது, இதனால் நீர் விரயம் மிகக் குறைவு.

**2. தெளிப்பு நீர் பாசனம்**

80-85% நீர் பயன்பாட்டுத் திறன் கொண்டது. இந்த முறையில், மழை பொழிவது போல் நீர் தெளிக்கப்படுகிறது.

**3. மேற்பரப்பு/பாத்தி பாசனம்**

60-70% அல்லது அதற்கும் குறைவான (30-50%) நீர் பயன்பாட்டுத் திறன் கொண்டது. இந்த முறையில், நீர் நிலத்தின் மேற்பரப்பில் பாய்ந்து செல்ல அனுமதிக்கப்படுகிறது, இதனால் ஆவியாதல், கசிவு மற்றும் வழிதல் இழப்புகள் அதிகம்.

**நீர் பாசன திறனை பாதிக்கும் காரணங்கள்**

மண் வகை (மணல், மணற்பாசி, கரிமண்), காலநிலை (வெயில், காற்று, ஆவியாகுதல்), பாசன முறை, வயல் சமநிலை மற்றும் பராமரிப்பு.

**நீர் பாசன திறனை உயர்த்தும் வழிகள்**

துளி/தெளிப்பு பாசனத்தை பயன்படுத்துதல், கால்வாய்களை சிமெண்ட் /பிளாஸ்டிக் மூலம் அடைத்தல், சரியான நேரத்தில், தேவையான அளவு நீர் பாசனம், மண் ஈரப்பதத்தை கண் காணித்தல்.

மேலும் விவரங்களுக்கு **செ.சுவாதி, இளங்கலை வேளாண் மாணவி மற்றும் முனைவர் பா.குணா, இணைப் பேராசிரியர், வேளாண் விரிவாக்க துறை, ம.ஆர்த்தி, ச.பூர்ணிமா, உதவி பேரா சிரியர்கள் மற்றும் குழு மேற்பார்வையாளர்கள், நாளந்தா வேளாண்மை கல்லூரி, எம்.ஆர்.பாளையம், திருச்சி. மின்னஞ்சல் : baluguna 8789@gmail.com, தொலைபேசி எண் : 99446 41459** ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.

# நான் முதல்வன் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி



கடலூர், ஜன.27

கடலூர் மாவட்டம், விருத்தாசலம், வேளாண் அறிவியல் நிலையத்தில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் 20 நாட்கள் மாணவர்களுக்கான காளான் வளர்ப்பு – சிறு பண்ணை திறன் மேம்பாட்டு பயிற்சி நடத்தப்படுகிறது. இதில் முதல் நாள் பயிற்சியாக நேற்று 27.01.26 தொடங்கப்பட்டது.

இப்பயிற்சியில் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க.நடராஜன் துவக்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார்.அரசு மேல்நிலைப்பள்ளி, ஆசிரியர்களான, ந.அருள்மொழி, வேளாண் தொழிற்கல்வி ஆசிரியை, விருத்தாசலம், மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் காளாண் வளர்ப்பு – சிறு பண்ணை பற்றி எடுத்துரைத் தார். கு.ரங்கநாதன், அரசு மேல்நிலைப்பள்ளி ஆசிரியர், ஆலடி, இப்பயிற்சியின் முக்கியத்துவம் மேலும், வேளாண் அறிவியல் நிலையத்தின் பங்கிணையும் பற்றி விளக்கினார். க.பாபாஜி, அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தொழில்கல்வி ஆசிரியர், மங்களம் பேட்டை, மாணவர்களுக்கு தொடர்ந்து ஊக்கம் அளித்தும் வரும் வேளாண்மை அறிவியல் நிலையம் பற்றியும், நான் முதல்வன் திட்டம் பற்றியும் மாணவர்களுக்கு எடுத்துரைத்தார். மேலும் இப்பயிற்சியில் முதல் நாளாக முனைவர் ஜெ.ஜெயகுமார், காளாண் பற்றிய அறிமுகம், காளாண் வளர்ப்பு முறை பற்றியும் மாணவர் களுக்கு எடுத்துரைத்தார். மேலும் காளாண் வளர்ப்பு, காளாண் படுக்கை அமைக்கும் தொழில்நுட்பங்கள், காளாண் வித்து தயாரிக்கும் முறை, அதில் ஏற்படும் நோய்கள் மற்றும் காளாண் மதிப்பு கூட்டுதல் அதில் உள்ள ஊட்டச்சத்துகள் மேலும் அதை சந்தைப்படுத்தும் முறைகள் மற்றும் தொழில் தொடங்குவதற்கான குளுளுபுஜ சான்றிதழ் பெறும் முறைகள் பற்றி இப்பயிற்சியில் செயல்விளக்கத்துடன் தெளிவாக வரும் நாட்களில் விளக்க உள்ளனர். இப்பயிற்சியில் வேளாண்மை அறிவியல் நிலைய தொழில்நுட்ப வல்லுநர்கள் முனைவர் கண்ணன், முனைவர் சுஜெய்வேலு, முனைவர் கலைச்செல்வி ஆகியோர் கலந்துக் கொண்டனர். கடலூர் மாவட்டத்தில் உள்ள விருத்தாசலம், ஆலடி மற்றும் மங்களம்பேட்டை அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் மற்றும் மாணவிகள் 45 பேர் கலந்துக் கொண்டனர்.

# வாழைப்பயிரில் மகசூல், தரத்தை மேம்படுத்தும் டெனாவெலிங் குறித்த விளக்கக் காட்சி நடத்திய வேளாண் கல்லூரி மாணவி



தேனி, ஜன.27

சில்லமரத்துப்பட்டி கிராமம், போடி வட்டாரம், தேனி மாவட்டம் பகுதியில் வாழைப்பயிரில் மகசூல் மற்றும் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் டெனாவெலிங் (Denavelling) குறித்த விளக்கக் காட்சி மற்றும் பயிற்சி நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சி Madurai Agricultural College and Research Institute–ஐ சேர்ந்த வேளாண்மை மாணவி கோகுல் மித்ரா, RAWE (Rural Agricultural Work Experience) திட்டத்தின் கீழ் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் அந்தப் பகுதியைச் சேர்ந்த 8 விவசாயிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

வாழைப்பயிரில் காய்கள் உருவான பின்பு தாவரத்தின் கீழ்பகுதியில் தோன்றும் தேவையற்ற ஆண் பூக்கொத்து (வாழைப் பூ) மற்றும் நார் பகுதிகள் தாவரத்தில் உள்ள ஊட்டச்சத்துகளை அதிகமாக பயன்படுத்துவதால், காய்களின் வளர்ச்சி பாதிக்கப்படட வாய்ப்பு உள்ளது. இதனைத் தவிர்க்க மேற்கொள்ளப்படும் சிறப்பு பயிர் மேலாண்மை முறையே டெனாவெலிங் ஆகும். இந்த முறையின் முக்கியத்துவம், சரியான காலம் மற்றும் செய்முறை குறித்து விவசாயிகளுக்கு விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டது.

டெனாவெலிங் செய்வதற்கான சரியான காலம், கடைசி கை (Last hand) முழுமையாக உருவான 7–10 நாட்களுக்குள் ஆகும். கூர்மையான மற்றும் சுத்தமான கத்தி அல்லது அரிவாளை பயன்படுத்தி, கடைசி கைக்குக் கீழே சுமார் 10–15 செ.மீ இடைவெளி விட்டு ஆண் பூக்கொத்தை வெட்ட வேண்டும். வெட்டிய இடத்தில் நோய் தாக்கம் ஏற்படாமல் இருக்க சுண்ணாம்பு அல்லது போர்டோ பேஸ்ட் தடவுவது அவசியம் என விளக்கப்பட்டது. இச்செய்முறை மூலம் தாவரத்தில் உள்ள உணவுச்சத்து காய்களின் வளர்ச்சிக்கே பயன்படுத்தப்படு வதால், காய்களின் அளவு, எடை மற்றும் தரம் மேம்படும்.

இந்த விளக்கக் காட்சியில் டெனாவெலிங் செய்வதன் பலன்களாக, தாவர ஊட்டச்சத்து வீணாவதைத் தடுக்க முடியும், காய்கள் ஒரே மாதிரியான வடிவத்தில் வளர்வது, பூச்சி மற்றும் நோய் தாக்கம்

குறைவது, மேலும் வாழைப்பயிரின் மகசூல் 10–15 சதவீதம் வரை அதிகரிக்கும் என்பதும் விளக்கப்பட்டது. இத்தொழில்நுட்பம் எளிமையானதும் குறைந்த செலவிலானதும் என்பதால், அனைத்து வாழை விவசாயிகளும் இதனை நடைமுறைப் படுத்தலாம் என வலியுறுத்தப்பட்டது.

பயிற்சியின் ஒரு பகுதியாக, டெனாவெலிங் தொடர்பான செய்முறை, சரியான காலம், பயன்கள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அடங்கிய தகவல் இலைகள் (leaflets) விவசாயி களுக்கு விநியோகிக்கப்பட்டன. இதன் மூலம் விவசாயிகள் பின்னரும் இந்த முறையை சரியாக நினைவில் வைத்து பின்பற்ற உதவியாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகள், இதற்கு முன்பு டெனாவெலிங் முறையை முறையாக பின்பற்றவில்லை என்றும், இப்பயிற்சியின் மூலம் தெளிவான விளக்கம் கிடைத்ததாகவும் தெரிவித்தனர். எதிர்காலத்தில் தங்களது வாழைப்பயிர்களில் இந்த முறையை சரியான காலத்தில் மேற்கொண்டு அதிக மகசூல் பெற திட்டமிட்டுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

முடிவாக, சில்லமரத்துப்பட்டி கிராமத்தில் நடைபெற்ற இந்த டெனாவெலிங் விளக்கக் காட்சி, RAWE திட்டத்தின் மூலம் மாணவர் களும் விவசாயிகளும் நேரடியாக இணைந்து பயனுள்ள தொழில் நுட்பங்களை பகிர்ந்து கொள்ளும் ஒரு சிறந்த முயற்சியாக அமைந்தது. இத்தகைய பயிற்சி நிகழ்ச்சிகள் விவசாயிகளின் அறிவையும் வருமானத்தையும் உயர்த்துவதில் முக்கிய பங்கு வகிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.




# பங்கேற்பு கிராமப்புற மதிப்பீடு மூலம் விழிப்புணர்வு அளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்



நாமக்கல், ஜன.27

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டாரத்தில் 05/01/26 அன்று முத்துக்காளிப்பட்டிக் கிராமத்தில் கிராமப்புற மற்றும் விவசாயப்பணி அனுபவம் என்ற வேளாண் பயிற்சியின் கீழ் துறையூரில் உள்ள இமயம் வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் இறுதி ஆண்டு மாணவிகள் 10 பேர் குழு எண் 1 மாணவிகள் கிராம மக்களுக்கு பங்கேற்பு கிராமப்புற மதிப்பீடு மூலம் விழிப்புணர்வு அளிக்கப்பட்டது. மாணவிகள் 10 பங்கேற்பு கிராமப்புற மதிப்பீடு மாதிரிகளை வரைந்தன.

மேலும் ஊர் மக்கள் அதை பார்வையிட்டு தங்களின் வாழ்வியல், சூழல், வளங்கள் மற்றும் பிரச்சனைகளை அடையாளம் காண வழி வகுத்தது. மாணவிகள் தற்காலிக வரலாறு (Time line), பிரச்சனை மரம் (Problem tree), சமுதாய வரைபடம் (Social map), உழவனின் தினசரி வேலை (Farmers daily routine), பருவ கால வரைபடம் (Seasonal crop calender), வட்ட விளக்கப்படம் (Pie chart), பட்டை விளக்கப்படம் (Bar chart), வென்படம் (Venn diagram), மக்கள் தொகை பாலினம் விகிதம் (Population gender ratio) ஆகிய பங்கேற்பு கிராமப்புற மதிப்பீடு மாதிரிகள் வரையப்பட்டது.

# தழைக்கூளம் (Mulching) - ஓர் பார்வை



இந்திய விவசாயத்தில் நீர் பற்றாக்குறை, மண் அரிப்பு, களைச் செடிகள், அதிக செலவு போன்ற பல பிரச்சனைகள் விவசாயிகளை பாதித்து வருகின்றன. இந்த பிரச்சனைகளுக்கு ஒரு எளிய மற்றும் பயனுள்ள தீர்வாக தழைக்கூளம் (Mulching) முறை விளங்குகிறது. மண்ணின் மேற்பரப்பை இயற்கை அல்லது செயற்கை பொருட் களால் மூடும் முறையே தழைக்கூளம் எனப்படுகிறது. இது பயிர் வளர்ச்சிக்கு ஏற்ற சூழலை உருவாக்கி, அதிக மகசூலை பெற உதவுகிறது. மண்ணில் உள்ள ஈரப்பதத்தை பாதுகாக்கிறது, வெப்ப நிலையை கட்டுப்படுத்துகிறது, மற்றும் களை வளர்ச்சியை தடுக்கிறது.

## தழைக்கூளம் செய்யும் முக்கிய நோக்கங்கள்

மண்ணில் நீர் ஆவியாகாமல் தடுக்கப் பயன்படுகிறது. களைச் செடிகளின் வளர்ச்சியை குறைக்கிறது. மண் வளம் மற்றும் கட்டமைப்பை மேம்படுத்துகின்றது. மண் அரிப்பு (Soil erosion) ஏற்படாமல் பாதுகாக்கிறது. பயிர்களின் வேர் வளர்ச்சியை ஊக்குவிக்கிறது. விவசாய செலவைக் குறைக்கிறது.

## தழைக்கூளம் வகைகள்

தழைக்கூளம் வகைகள் பொதுவாக,

1. இயற்கை தழைக்கூளம் 2.செயற்கை தழைக்கூளம் என இரண்டு முக்கிய பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

## இயற்கை தழைக்கூளம் (Organic Mulching)

இயற்கையாக கிடைக்கும், அழுகக்கூடிய பொருட்களை பயன் படுத்தி செய்யப்படும் தழைக்கூளம் முறையே இயற்கை தழைக் கூளம் ஆகும்.

## பயன்படுத்தப்படும் பொருட்கள்

நெல் வைக்கோல், கோதுமை வைக்கோல், உலர்ந்த இலைகள், புல் துண்டுகள், நெல் உமி.

## இயற்கை தழைக்கூளம் நன்மைகள்

மண்ணில் கரிமச் சத்து அதிகரிக்கும். மண் உயிரிகள் (நுண்ணு யிர்கள், புழுக்கள்) அதிகரிக்கும். நீண்ட காலத்திற்கு மண் வளம் மேம்படும். சுற்றுச்சூழலுக்கு எந்த பாதிப்பும் இல்லை. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஏற்றது.

**குறைகள்**

அடிக்கடி மாற்றி போட வேண்டும். சில நேரங்களில் பூச்சிகள் தங்க வாய்ப்புகள் உள்ளது. அதிக மழையில் அழுகி போய்விடும்.

**செயற்கை தழைக்கூளம் (Inorganic / Plastic Mulching)**

செயற்கையாக தயாரிக்கப்பட்ட பொருட்களை பயன்படுத்தி செய்யப்படும் தழைக்கூளம் முறையே செயற்கை தழைக்கூளம் ஆகும்.

**பயன்படுத்தப்படும் பொருட்கள்**

கருப்பு நெகிழி தாள், வெள்ளை நெகிழி தாள், நெகிழி தாள்.

**செயற்கை தழைக்கூளம் நன்மைகள்**

களை வளர்ச்சி முழுமையாக தடுக்கப்படும். நீர் பயன்பாடு 40–60% வரை குறையும். மண் வெப்பநிலை கட்டுப்பாட்டில் இருக்கும். பயிர்கள் வேகமாக வளர்ச்சி அடையும். வணிக பயிர்களுக்கு அதிக மகசூல்.

**குறைகள்**

ஆரம்ப செலவு அதிகம். சுற்றுச்சூழல் மாசு ஏற்படும் வாய்ப்புகள் உள்ளது. பயன்பாட்டுக்குப் பின் சரியான முறையில் அகற்ற வேண்டும்.

**தழைக்கூளம் மற்றும் மண் வெப்பநிலை**

தழைக்கூளம் மண்ணின் வெப்பநிலையை சமநிலையில் வைத்திருக்கிறது. கோடைக்காலத்தில் மண் அதிகமாக காயாமல் பாதுகாக்கிறது குளிர்காலத்தில் மண்ணின் வெப்பத்தை தக்க வைத்துக் கொள்கிறது. இதனால் வேர் வளர்ச்சி சிறப்பாக நடைபெறுகிறது.

**தழைக்கூளம் மற்றும் நீர் மேலாண்மை**

தழைக்கூளம் நீர் மேலாண்மையில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. நீர் ஆவியாகும் அளவு குறையும். பாசன இடைவெளி அதிகரிக்கும். சொட்டு நீர் பாசனத்துடன் சேர்த்து பயன்படுத்தலாம்.

**களை மேலாண்மையில் தழைக்கூளம்**

களைச் செடிகள் பயிர்களுக்கு தேவையான நீர், சத்து மற்றும் ஒளியை உறிஞ்சி மகசூலை குறைக்கின்றன, இதனால் தழைக்கூளம் பயன்படுத்துவதன் மூலம் களைச்செடியின் வளர்ச்சயை கட்டுப்படுத்தலாம்.

**தழைக்கூளம் பயன்படுத்தப்படும் பயிர்கள்**

**காய்கறி பயிர்கள்**
தக்காளி, மிளகாய், கத்திரிக்காய், வெண்டைக்காய்

**பழப் பயிர்கள்**
வாழை, மாம்பழம், பப்பாளி, எலுமிச்சை, தர்பூசணி

**மலர் பயிர்கள்**
ரோஜா, செவ்வந்தி, மல்லிகை

**தழைக்கூளம் செய்யும்போது கவனிக்க வேண்டியவை**

மழை காலத்தில் நீர் வடிகால் வசதி இருக்க வேண்டும். பூச்சிகள் தங்காதபடி கண்காணிப்பு அவசியம். நெகிழி தழைக்கூளம் கழிவுகளை முறையாக அகற்ற வேண்டும்.

**தழைக்கூளம் மூலம் கிடைக்கும் பொருளாதார நன்மைகள்**

பாசன செலவு குறைகிறது. களை கட்டுப்பாட்டு செலவு குறைகிறது. மகசூல் அதிகரித்து வருமானம் உயருகிறது.தாழிலாளர் தேவை குறைகின்றது.

தழைக்கூளம் என்பது குறைந்த செலவில் அதிக பயன் தரும் ஒரு சிறந்த விவசாய தொழில்நுட்பமாகும். மண் வளம், நீர் மேலாண்மை, களை கட்டுப்பாடு மற்றும் மகசூல் உயர்வு ஆகிய அனைத்திற்கும் தழைக்கூளம் ஒரு ஒருங்கிணைந்த தீர்வாக விளங்குகிறது. எதிர்காலத்தில் நிலைத்த மற்றும் சுற்றுச்சூழல் நட்பு விவசாயத்தை அடைய தழைக்கூளம் முறை தவிர்க்க முடியாததாகும்.

மேலும் விபரங்களுக்கு **மு.கிருத்திகா, இளங்கலை வேளாண் மாணவி, முனைவர் பா.குணா, இணைப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், முனைவர் இர.மகாலட்சுமி, ம.பானுப்பிரியா, குழு மேற்பார்வையாளர்கள், நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, எம்.ஆர்.பாளையம், திருச்சி. மின்னஞ்சல் : baluguna8789@gmail.com, தொலைபேசி எண் : 99446 41459** ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.

